## மேகதாது அணை திட்டத்தால்

# தமிழ்நாடு விவசாயிகள் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, ஆக 2-

கர்நாடகா அரசின் மேகதாது திட்டத்தால் காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஆலோசனை நடத்தப்பட்டதா? என்றும் ஒன்றிய ஜல் சக்தித் துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு:

கர்நாடக மாநில அரசால் முன்மொழியப்பட்ட மேகதாது அணையானது, அணையானது, தமிழ்நாட்டில் உள்ள காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம், விவசாய உற்பத்தி மற்றும் பாசனம் ஆகியவற்றின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

எதிர்தது இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு மற்றும் விவசாய அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகள் அல்லது கருத்துருக்கள் வந்துள்ளனவா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குத் தேவையான காவிரி நீர் சரியான நேரத்தில் திறந்துவிடப்படுவதில் இத்திட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வா றெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன

இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஏதேனும் கலந்தாலோசனை நடத்தப்பட்டதா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நதிநீரில் தமிழ்நாட்டிற்கான நியாயமான பங்கை பாதிக்கும் வகையிலான எந்தவொரு திட்டத்திற்கும், தற்போதுள்ள தீர்ப்பாய மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி ஒப்புதல் அளிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

## இருமல் மருந்து உள்ளிட்ட சிரப் வகை மருந்துகளை

# மருத்துவர் பரிந்துரையின்றி விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக 2-

நாட்டில் மருந்துகளின் தரம், இருமல் மருந்து உள்ளிட்ட சிரப் வகை மருந்துகளை மருத்துவர் பரிந்துரையின்றி விற்பனை செய்வதை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், மருந்துகளின் தரக் கட்டுப்பாடு, ஆய்வு, பரிசோதனை, தரமற்ற மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள், மத்திய மற்றும் மாநில மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மருந்துப் பாதுகாப்பை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான விளக்கத்தை மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த் அவர்கள் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில்விவரம்கீழ்வருமாறு:-

1940-ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம்

*Drugs and Cosmetics Act*, 1940 மற்றும் *Drugs Rules*, 1945-ன் படி, *Schedule X, H* மற்றும் H1-இல் உள்ள மருந்துகள் அனைத்தும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார். மேலும், 09.06.2026 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம், கிராமப்புறங்களில் இருந்த இருமல் சிரப் விற்பனைக்கு வழங்கப்பட்டிருந்த விதிவிலக்கு நீக்கப்பட்டு, நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், 2022 டிசம்பர் முதல் நாடு முழுவதும் 1,040-க்கும் மேற்பட்ட மருந்து உற்பத்தி நிலையங்களில் ஆபத்து அடிப்படையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 950-க்கும் மேற்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் 1,100-க்கும் மேற்பட்ட இருமல் சிரப் உற்பத்தியாளர்கள் தீவிர தணிக்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பரிசோதிக்கப்பட்ட மருந்து மாதிரிகள் மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களும் பதிலில் இடம்பெற்றுள்ளன.

மருந்துப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், *Schedule M* திருத்தம், தரநிலை ஆய்வு வழிகாட்டுதல்கள், அதிகாரிகளுக்கான பயிற்சிகள், மாநிலங்களுடனான ஒருங்கிணைப்பு, தரமற்ற மருந்துகள் குறித்த "*Drug Alert*" வெளியீடு மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## புதிய திட்டங்களுக்கு ஊக்கத் தொகை உண்டா?

# சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி ஆக.2-

சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார். அவரது கேள்விகள் வருமாறு.

வலுவான கொள்கை சூழலின் ஆதரவுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இந்தியா உலகளாவிய தலைவராக உருவெடுத்துள்ளதை அரசாங்கம் கவனித்துள்ளதா, அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன;

(b) நாட்டின் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் திறனில், குறிப்பாக காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு பற்றிய விவரங்கள்;

(c) பல்வேறு புதுப்பிக்கத் தக்க ஆற்றல் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஏதேனும் புதிய திட்டங்கள், ஊக்கத்தொகைகள் அல்லது உள்கட்டமைப்பு முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா, அவ்வாறாயின் அதன் விவரங்கள்;

(d) தமிழ்நாட்டில் கடலோரக் காற்று ஆற்றல் (*offshore wind energy*), ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் (*energy storage systems*), பசுமை ஹைட்ரஜன் மற்றும் மின் கட்டமைப்பு நவீனமயமாக்கல் (*grid modernization*) ஆகியவற்றை ஊக்குவிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் விவரங்கள்; மற்றும்

(e) கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் மற்றும் சேர்க்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் ஆகியவற்றின் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

## சோபா மாடல் ஆட்சியில்

# பத்திரிகையாளர்கள் கீழே அமர்ந்து செய்தி சேகரிக்கும் அவலம்!

கள்ளக்குறிச்சி.ஆக.2-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி, கல்வராயன் மலை பகுதியில் நேற்று முன் தினம் ஜுலை 31.07.2026 வெள்ளிக்கிழமை அன்று கோடை விழா தொடங்கியது.

கடந்த காலங்களில் கோடை விழாவின் போது கள்ளக்குறிச்சியில் இருந்து செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் வாகன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அனைத்து பத்திரிகையாளர்களும் கல்வராயன் மலை கோடை விழா அரங்கிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள், இந்த முறை வாகன வசதி, குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏதும் பத்திரிகையாளர்களுக்கு செய்து தரப்படவில்லை, அதையும் பொருட்படுத்தாமல் செய்தியாளர்கள் தங்களது சொந்த செலவில் பயணம் செய்து கல்வராயன் மலைக்கு சென்று செய்தி சேகரிக்க விழா மேடைக்கு முன்னதாக வந்திருந்த போதும் அங்கு அவர்களுக்கான இருக்கைகள் வழங்கப்படவில்லை .

இதனால் செய்வதறியாது திகைத்த செய்தியாளர்கள் அனைவரும் தரையில் அமர்ந்து செய்தி சேகரிக்க தொடங்கினார்கள். இதனால் விழா மேடையில் சலசலப்பு ஏற்பட்டது. மேலும் இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பத்திரிகையாளர்கள் சார்பில் கோரிக்கையும் வைத்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தொடர்ந்து சோபா மாடல் ஆட்சியில் பத்திரிகையாளர்கள் அவமதிப்பு செய்யப்படுவது தொடர்கதை ஆகி வருகிறது.

## தலைமைக் கழக அறிவிப்பு!

ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஈரோடு மத்திய மாவட்டத்திற்குரிய சட்டமன்ற தொகுதிகளான பெருந்துறை தொகுதி ஈரோடு தெற்கு மாவட்டத்திலும், பவானி தொகுதி ஈரோடு வடக்கு மாவட்டத்திலும் இணைக்கப்பட்டு அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் நிர்வகிப்பார்கள்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 31.07.2026

# வரும் காலத்தை வடிவமைத்திருக்கிறார்கள்!




தமிழ்த்தாய் வாழ்த்து தந்த
மனோன்மணீயம் சுந்தரனார் பெயருடைய
பல்கலைக்கழகத்திலேயே
"நீராரும் கடலுடுத்த..." பாடலுக்கு
மூன்றாவது இடம்!
அப்படியும் ஆளுநர் கையால்
பட்டங்களை வாங்க
மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!
இந்த ஆண்டு ஆகஸ்ட் 15,
விடுதலை நாள்விழா
கரப்பான் பூச்சிகளின்
வெற்றி விழாவும் கூட!

மல்லாக்க விழுந்தால்
திரும்ப முடியாமல்
கால்கள் நடுங்கும் கரப்பான் பூச்சிகள்,
மக்களாட்சிக்குப்
புதிய பாடம் கற்றுத் தந்துள்ளன.
மாறும் தலைமுறைகள்
சிந்தனைகளையும் மாற்றுகின்றன!
ஆனால் அநீதிக்கு எதிராக
அணி திரளும் பண்பில்
இடைவெளிகள் இருப்பதில்லை.

தேவை ஏற்பட்டால் தெருவுக்கு வரவும்,
அடக்குமுறைகளை அடக்கிக் காட்டவும்,
களத்தில் நின்றது மாணவர் கூட்டம்!
சமூக ஊடகங்களில் வாழ்க்கையைத்
தொலைக்கிறார்கள் என்ற
மூத்த தலைமுறையின்
முணுமுணுப்புகளுக்கு
முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது!
தொழில்நுட்பத்தின் கூட்டணியில்
தங்கள் வலிமையின் எண்ணிக்கையில்
விஸ்வரூபம் எடுத்திருக்கிறது!
பொழுதுபோக்கு ஊடகமாக
மாறிக்கொண்டிருந்த
சமூக ஊடகத்தை,
சமுதாய மாற்றத்திற்கான
உலகக் குரலாக
மாற்றிக் கொண்டிருக்கிறது!

எழுந்த குரலை
எதிர்கொள்ள முடியாமல்
அதிகாரச் செருக்கு மையங்களும்
அதிர்ந்து போயிருக்கின்றன!
இந்தப் போராட்டம்
தலைநகர் மாணவர்களின்
உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமல்ல;
உலகம் முழுவதும் ஏங்கும்
சமூக நீதி, நல்லாட்சி,
வெளிப்படைத்தன்மை,
சுற்றுச்சூழல், பொறுப்புணர்வு
ஆகியவற்றை
வற்புறுத்தும்
மக்களாட்சியின் மகத்துவமும் கூட!

"நீங்கள் உலகில் காண விரும்பும்
மாற்றமாக நீங்களே இருங்கள்"
என்றார் மகாத்மா காந்தி!
முயற்சி செய்திருக்கிறார்கள்
மாணவர்கள்!
அவர்கள் முயற்சி
நட்சத்திரங்களை இலக்காக்கி
நிற்கிற இடத்தையும்
கோட்டை விடுவதில்லை;

நட்சத்திரங்களையே வெற்றி கொள்வது!
'எனக்கு
நூறு இளைஞர்களைக் கொடுங்கள்;
இந்தியாவையே மாற்றிக் காட்டுகிறேன்"
என்றார் விவேகானந்தர்.
கொடுங்கள் என்று கையேந்தாமல்,
அவர்களுக்கு அவர்களே
கை கொடுத்து
அதிகார மேலாதிக்கத்தை
மாற்றியிருக்கிறார்கள்!

"இளைஞர்களே சிந்தியுங்கள்;
யாருடைய சொல்லையும்
அப்படியே நம்பாதீர்கள்" என்ற
பெரியாரின் மொழியாய்க்
களத்தில் நின்றிருக்கிறார்கள்!

"படித்த இளைஞர்கள்
தனக்காக மட்டுமல்ல,
சமுதாயத்திற்காகவும் வாழ வேண்டும்"
என்றார் கலைஞர்!
வரும் தலைமுறைக்காகவும்
தலைநகரில்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்!
போராட்டம் என்பதே
இலக்கு இல்லை;
மாற்றத்திற்கான வழிமுறை!
வெற்றி என்பது
எதிரியை வீழ்த்துவதில் இல்லை.
அனைவருக்குமான
தீர்வைக் கண்டடைவது!

மாறி வருகிறது
மாணவர்களின் சமூகப் பொறுப்பு!
மக்களின் குரலை மதிக்கும்
ஆட்சியும்,
பொறுப்புணர்வுள்ள
மக்களும்தாம்
மக்களாட்சியின் பண்புகளை
மாண்புறச் செய்யும் என்பதை
மீண்டும் போராட்டம்
நினைவுபடுத்தியிருக்கிறது!
அவர்கள், போராட்டத்தால்
எதிர்காலத்தை உருவாக்கவில்லை!
காலம் இயற்கை.
காலத்தை உருவாக்க
யாராலும் முடியாதுதானே!
அதனால் அவர்கள்,
போராடியதால்
வரும் காலத்தை
வடிவமைத்திருக்கிறார்கள்!



அன்புடன்
**ம.ரா**



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அரக்கோணம் சட்டமன்ற தொகுதி சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆர். காந்தி ஆலோசனை கூறி கருப்பு சிவப்பு, அவரும் நானும் ஆகிய புத்தகங்களை வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணய்யன், அ.அசோகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.